

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாத்தலைமுன்னிட்டு நடைபெற்ற மரம்நடு தலை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் துவக்கி வைத்தார் இதில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன்,பல்கலைக்கழக துணைவேந்தர் க.ரவி, துணை மேயர் நா.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில்

# சுற்றுலாப் பயணிகளுக்கான சேவைகள், கட்டமைப்பு வசதிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சென்னை, ஜூலை 19-

சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில் சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாட்டு பணிகள் குறித்தும், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்தும் சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்களின் தலைமையில் நேற்று 18.07.2025 சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், சுற்றுலாத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி மேம்பாடு மற்றும் மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தின் சுற்றுலா வளர்ச்சிப் திட்டப் பணிகள் குறித்து முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், முத்திரைத் திட்டங்கள், பிற அரசுத்துறைகளிடமிருந்து பெற வேண்டிய திட்டப்பணிகள் குறித்த தடையின்மை சான்றுகள் பெறுவது, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் குறித்தும், புதிய முன்மொழிவுகள் குறித்தும் மற்றும் முடிவுற்ற பணிகள் தற்போதைய நிலை பயன்பாடுகள் குறித்தும், திறப்பு விழாவிற்கு தயாராக இருக்கும் நிறைவடைந்த பணிகளான, தென்காசி மாவட்டம் குண்டாறு அனணையில் சாகச மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா,

திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியை பல்வேறு சுற்றுலா வசதிகளை மேம்படுத்துதல், புதுக்கோட்டை மாவட்டம் முத்துகூடா கடற்கரை மேம்பாட்டுப் பணிகள், திருவள்ளூவர் மாவட்டம் பூண்டி அணை சுற்றுலா மேம்பாட்டு பணிகள், மதுரை மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல் தமிழ்நாடு பிரிவு 2ல் அதிநவீன வசதிகள் கூடிய தங்கும் விடுதி கட்டடம் போன்ற பணிகள் குறித்தும், சுற்றுலாத் தலங்களில் வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்தும்

சுற்றுலாத்துறை உதவி இயக்குநர், பொறியாளர்கள் மற்றும் அனைத்து சுற்றுலா அலுவலர்களுடனும் கலந்துரையாடல் செய்து, சுற்றுலாப்பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகள் முதற்கொண்டு அனைத்து வகையான சுற்றுலா சேவைகளும் சிறப்பான முறையில் மேற்கொள்ள படுகிறதா என சுற்றுலாத்துறை அமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிருஸ்துராஜ் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி ச. கவிதா திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கல்வராயன் மலை ஒன்றியம் - பாச்சேரி ஊராட்சி கிராமங்களில்

# புதிய கட்டடங்கள் திறப்பு - புதிய பணிகளுக்கு அடிக்கல்!

## தா. உதயசூரியன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கல்வராயன்மலை, ஜூலை 19- கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கல்வராயன்மலை ஒன்றியத்தில், பாச்சேரி ஊராட்சி, பாச்சேரி கிராமத்தில் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டிடம் ரூ.30.10/ லட்சம் மதிப்பீட்டில் திறப்பு விழா, தும்பை கிராமத்தில் நிழற்குடை ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் திறப்பு விழா,

மோட்டாம்பட்டி கிராமத்தில் நியாய விலைக் கடை ரூ.13.56 லட்சம் மதிப்பீட்டில் திறப்பு விழா மற்றும் தாட்கோ சமுதாயக் கூடம் ரூ.50 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா ஆகிய நிகழ்வில்,

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு தலைமையேற்று தனது பொற்கரங்களால் ரிப்பன் வெட்டி கிராம பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார், மேலும் அடிக்கல் நாட்டி கட்டுமானப் பணிகளையும் தொடங்கி வைத்து சிறப்பித்தார்,

இந்நிகழ்வில், கல்வராயன்மலை ஒன்றிய குழு பெருந்தலைவர் சி.சந்திரன், கல்வராயன்மலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சு.கிருஷ்ணன், தெற்கு ஒன்றிய கழக செயலாளர் த.எல்.சின்னதம்பி, ஒன்றிய குழு துணை பெருந்தலைவரும், கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட மகளிரணி தலைவியுமான பாட்சாபீ ஜாகீர் உசேன் மற்றும் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

## கபிலர்மலை வடக்கு, கபிலர்மலை மத்திய,கபிலர்மலை தெற்கு ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் மற்றும் ஒன்றிய பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

கபிலர்மலை வடக்கு ஒன்றியம் : 1.குப்பிரிக்காபாளையம், 2.பெருங்குறிச்சி, 3.சுள்ளி பாளையம், 4.சோழசிராமணி, 5.ஜமீன்எளம்பள்ளி, 6.குரும்பலமகாதேவி, 7.கொத்த மங்கலம் ஆகிய 7 ஊராட்சிகள்.

கபிலர்மலை மத்திய ஒன்றியம்:1.திடுமல், 2.தி.கவுண்டம்பாளையம், 3.சிறு நல்லிகோவில், 4.கபிலக்குறிச்சி, 5.பெரியசோளிபாளையம், 6.வடகரையாத்தூர் ஆகிய 6 ஊராட்சிகள்

கபிலர்மலை தெற்கு ஒன்றியம் : 1.இருக்கூர், 2.ஆனங்கூர், 3.குன்னத்தூர், 4.பிலிக் கல்பாளையம், 5.சேளூர், 6.கொந்தாளம், 7.கோப்பனம்பாளையம் ஆகிய 7 ஊராட்சிகள் மற்றும் வெங்கரை, பாண்டமங்கலம், பொத்தனூர் ஆகிய 3 பேரூர்கள்.

ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம் .

மேற்கண்டவாறு அமையப் பெற்ற கபிலர்மலை வடக்கு, கபிலர்மலை மத்திய, கபிலர்மலை தெற்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கபிலர்மலை வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் :எம்.சுப்பிரமணியம்.தளபதி உணவகம், மெயின் ரோடு,

சோழசிராமணி & அஞ்சல்,பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம்.

**கபிலர்மலை மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் :.எம்.சரவணக்குமார்,தண்ணீர்பந்தல்,பெரியசோளிபாளையம் அஞ்சல்,கபிலர்மலை, பரமத்திவேலூர் வட்டம்,நாமக்கல் மாவட்டம்

**கபிலர்மலை தெற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் :பி.பி.சாமிநாதன், இருக்கூர் & அஞ்சல்,கபிலர்மலை,

பரமத்திவேலூர் வட்டம்,நாமக்கல் மாவட்டம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 18.07.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



தேனி வடக்கு மாவட்டம் போடி தொகுதி மேற்கு ஒன்றியம்கொட்டக்குடி மலைப்பகுதி கிராமத்தில் டவரில்லாத மலைப் பகுதிகளுக்குச் சென்று ‘ஓரணியில் தமிழ்நாடு’ புதிய வாக்காளர்கள் போடி மேற்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், எஸ் லட்சுமணன், தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஷிப் கான் மற்றும் கிளை கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் கொட்டகுடி மலைப்பகுதியில் வீடு வீடாகச் சென்று புதிய உறுப்பினர்கள் சேர்த்தனர்.



விருதுநகர் மாவட்டம் , விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் கன்னிச்சேரி புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் , மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் துணை சுகாதார நிலைய புதிய மையங்கள் , வட்டார சுகாதார அலகு , அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டடம் என மொத்தம் ரூ .5.95 கோடி மதிப்பிலான 14 புதிய மருத்துவ கட்டடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் , நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து , கர்ப்பிணி தாய்மார்களுக்கு தாய் சேய் நல பெட்டகங்களை வழங்கினார்கள் . உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் , சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் , சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் அவர்கள் , விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.ஜெயசிங் , மாவட்ட சுகாதார அலுவலர் மரு.யசோதாமணி , நகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், ஒன்றியச் செயலாளர் புலிநாயக்கர், துணைச் செயலாளர் குருசாமி ஆகியோர் உள்ளனர் .



பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கள்ளக்குறிசசி மாவட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுடன் கற்றல் அடைவுக்கான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

### ‘ஒன்றிய அரசின் புதிய செயலி’யால் –

# 100 நாள் வேலைத் திட்டத்தில் குளறுபடிகள்!

## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 19-

ஒன்றிய அரசின் புதிய செயலியால் 100 நாள் வேலைத்திட்டத்தில் குளறுபடி ஏற்பட்டுள்ளதாக காங்கிரஸ் கட்சி பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2022ம் ஆண்டு மே மாதம் ஒன்றிய அரசு, 100 நாள் வேலை திட்டத்தில் தொழிலாளர்கள் வருகை மற்றும் பணிகளை டிஜிட்டல் முறையில் சரிபார்ப்பதற்காக, தேசிய மொபைல் கண்காணிப்பு அமைப்பு செயலியை அறிமுகம் செய்ததாக தெரிவித்துள்ளார்.

ஆனால், செயலியில் இருக்கும் செயல்பாட்டு சிக்கல்கள், திட்டத்தின் உண்மை தன்மையை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்து காங்கிரஸ் தொடர்ந்து எடுத்துக்கூறி வருவதாக குறிப்பிட்டுள்ள அவர், செயலியில் உள்ள பல்வேறு சிக்கல்களையும் ஒன்றிய அரசு ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த செயலி மூலம், வேலை உறுதித் திட்டத்தில் பணியிடங்களில் இருந்து புகைப்படங்களை பதிவேற்றுவது, இணைப்பு சிக்கல்கள் காரணமாக புகைப்படங்களை பதிவேற்ற முடியாத உண்மையான தொழிலாளர்களை விலக்கி விடும் என்பது ஆரம்பத்தில் இருந்தே தெளிவாக இருந்தது.

இந்த செயலியில் போலி தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு இரண்டு முறை புகைப்படம் எடுத்து, ஒரு நிமிடம் கூட வேலை செய்யாமல் ஊதியம் பெற வழி வகுத்துள்ளது. மேலும், போலி மற்றும் சீரற்ற புகைப்படங்கள் பதிவேற்றப்படுகின்றன என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது. இது தேசிய மொபைல் கண்காணிப்பு செயலியின் பயனற்ற தன்மையை நிரூபிப்பதாக ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டியுள்ளார்.

### கவிஞர் ரவிபாரதியின்

# ‘தமிழகத்தின் தவப்புதல்வர் காமராஜர்’ நூல்!

## வி.ஐ.டி.பல்கலைக்கழக வேந்தர் ஜி.விசுவநாதன் வெளியிட்டார்!

## டி.கே.எஸ். இளங்கோவன் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 19-

பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளினையொட்டி, தியாகராய நகர் சர்பிட்டி தியாகராயர் அரங்கில், “தமிழகத்தின் தவப்புதல்வர் காமராஜர்’ என்னும் தலைப்பில் கவிஞர் இரவிபாரதி எழுதிய நூல் வெளியிட்டு விழா நடைபெற்றது.

விஜடி பல்கலைக் கழக வேந்தர் கோ. விசுவநாதன் நூலினை வெளியிட, விஜிபி குழுமத்தின் தலைவர் விஜி சந்தோசம் முதல் நூலினைப் பெற்றுக் கொண்டார்... இருவரும் வாழ்த்துரை வழங்கிப் பேசினர்... எப்படி இந்நூல் உருவாயிற்று என்பது குறித்து கவிஞர் இரவிபாரதி பேசும் பொழுது, காமராஜரோடு ஏற்பட்ட தொடர்பு குறித்து விளக்கமாகப் பேசினர்..

கவிஞர் ஏர்வாடி இராதாகிருஷ்ணன் வரவேற்புரை நிகழ்த்த, இளம்பரி உ. கருணாகாரன் தொடக்க வரை ஆற்ற தி.மு.க செய்தித் தொடர்புத் துறைத் தலைவர் டி.கே.எஸ் இளங்கோவன், தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் சொர்ணா சேதுராமன், பொதுச்செயலாளர் சி.ஆர். சுந்தர்ராஜன், விருகம்பாக்கம் திமுக சட்டமன்ற உறுப்பினர் பிரபாகர்ராஜா, சேதுபாஸ்கரா கல்விக் குழுமத்தின் தலைவர் டாக்டர் சேதுகுமணன், தமிழ்ப்பணியின் மாத இதழின் ஆசிரியர் வ.மு.சோ. திருவள்ளுவர் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

திராவிடக் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

புத்தகத்தை வெளியிட்ட மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் மீனாட்சி சோம சுந்தரருக்கும் எழுத்தோவியர் நானாவும் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்...

பல்வேறு கட்சிகளைச் சார்ந்த அரசியர் பிரமுகர்களும், முன்னாள் அரசவைக் கவிஞர் முத்துலிங்கம் போன்ற தமிழ் அறிஞர் பெருமக்களும், தமிழ் அமைப்புகளும் கலந்து கொண்டு கவிஞர் இரவிபாரதிக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தனர்.

திரைப்படப் பாடகர் பிரபாகர் தமிழ்வாழ்த்தும் காமராஜர் பற்றிய பாடலையும் மிகச் சிறப்பாகப் பாட, பெயரியல் பேராசிரியர் ராஜராஜன் நன்றி உரை ஆற்ற, ஜான் தன்ராஜ் மிகச் சிறப்பாகத் தொகுத்து வழங்க விழா இனிதாக நடந்தேறியது.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமினை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்து 2.22கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டு மானத் திட்டத்தில் தொகுப்பு வீடுகளை புனரமைப்பதற்கான உத்தரவினை வழங்கினார்.உடன் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய பெருந்தலைவர்அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, ஊரக வளர்ச்சித் துறை உதவி செயற்பொறியாளர் அன்புராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமதாஸ் இளங்கோவன் உள்ளனர்.